# 4.2 இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்

**வேத வசனம்:** இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள். அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. 1 தெச.5:17,18

**அறிக்கை:** நாம் எதற்கும் கவலைப்படாமல் ஸ்தோத்திரத்தோடே ஜெபம் செய்வோம்.

**சத்தியம்:** நீங்கள் எதற்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் ஸ்தோத்திர ஜெபத்தினால் தேவனுக்குத் தெரியப்படுத்தவும், இடைவிடாமல் ஜெபிக்க பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்கவும் கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

## பாடக்குறிப்புகள்

* **தேவன் ஜெபத்தின் முக்கியத்துவத்தைச் சொல்லியிருக்கிறார்** - *யோவான் 16:24, லூக்கா 11:9-13*
* **ஜெபத்தின் வகைகள்** - *எபே 6:18, 1 தீமோ 2:1-12*
* **இடைவிடாமல் ஜெபிப்பதால் வரும் ஆசீர்வாதங்கள்** - *தானி 10:12*
* **ஆவியிலே ஜெபம் பண்ணுங்கள்** - *ரோ.8:26,27*

## வேதப்பகுதி

*தானியேல் 10:1-21*

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *பொதுவாக எப்போது நீங்கள் ஜெபிப்பீர்கள்?*
- *ஜெபிப்பது கடினம் என்று எண்ணுகிறீர்களா?*
- *ஜெபம் என்றால் என்ன? (மத். 6:6-14)*

## 24/7 நேரத் தொடர்பு

எந்த நாளிலும் எந்த வேளையிலும் யாரிடத்தில் நீங்கள் தொடர்பு கொள்ள முடியும்? எந்த ஒரு கட்டணமோ, கைப் பேசியோ, மின்னஞ்சலோ இல்லாமல் யாரிடத்தில் நீங்கள் தொடர்பு கொள்ள முடியும்? கர்த்தர், அவர் உங்களிடத்தில் தொடர்பு கொள்ளும்படி எப்போதும் வாஞ்சையாயிருக்கிறார். உங்கள் குரலைக் கேட்க அவர் மிகவும் ஆவலாயிருக்கிறார். நீங்கள் நேரம் எடுத்து அவரோடு தொடர்பு கொள்ள மாட்டீர்களா?

**சிந்திக்க:**

*நாம் எப்படி இடைவிடாமல் ஜெபம் பண்ண முடியும்?*

___

___

**ஜெபம்:**

*எப்போதும் ஜெபிக்கும் இதயத்தைத் தரும்படியாய் தேவனிடம் ஜெபிக்கும் ஜெபத்தை எழுதுங்கள்.*

___

___

**செயல்**

**எல்லாவற்றிற்கும் தேவனைப் பாருங்கள். உங்களைச் சுற்றியுள்ள பொருட்களும் மனிதரும் தேவனை உங்களுக்கு நினைவுபடுத்த பரிசுத்த ஆவியானவரின் உதவியைக் கேளுங்கள். இடைவிடாமல் அவரிடம் ஜெபியுங்கள்.**